வாய்மையே வெல்லும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

89வது ஆண்டறிக்கை

2017 - 2018

15-08-2018 - சுதந்திர தினத்தன்று மாண்புமிகு தேர்வாணைய தலைவர் அவர்களால் நமது தேசிய கொடி ஏற்றப்படுகிறது.

15-08-2018 - அன்று தேர்வாணைய அலுவலக வளாகத்தில் புதிய கலந்தாய்வு கூடம் திறத்து வைக்கப்படுகிறது

கலந்தாய்வுக்கு முன்னர் மூலச் சான்றிதழ் சரிபார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

89வது ஆண்டறிக்கை 2017–2018

இவ்வாண்டறிக்கை ஏப்ரல் 1, 2017 முதல் மார்ச் 31, 2018 வரையிலான காலத்திற்குட்பட்டதாகும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2017–2018

பொருளடக்கம்

பகுதி எண்.	பொருள்	பக்க எண்
(1)	(2)	(3)
	முன்னுரை	1
1.	செயல்பாடுகள் மற்றும் கடமைகள்	2
2.	நேரடி நியமனங்கள், இதரத் தேர்வுகள், பிற பணிகள் மற்றும் அறிவிக்கைகள்	2–5
3.	தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை	5
4.	பணிமாற்றம்/பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள், மேல் முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை விதிகள், ஒழுங்கு முறைகள், தற்காலிக நியமனங்கள் இன்ன பிற	5 –6
5.	இதரத் தேர்வுகள்	7
6.	அரசும் தேர்வாணையமும்	7–17
	ஏற்புரை	17
	பிற்சேர்க்கை	
வ.எண்.	**பொருளடக்கம்**	பக்க எண்
1.	தேர்வாணையத்தில் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	18
2.	வருவாய் மற்றும் செலவினம்	19
3.	நேரடித் தேர்வில் இறுதித்தெரிவுகள்	20–29
4.	வெளியிடப்பட்ட அறிவிக்கை பட்டியல் (நேரடி நியமனம்)	30–31
5.	முதனிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு நடைபெற்ற விவரங்கள்	32–38
6.	பல்வேறு தேர்வுகளில் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை	39–40
7.	பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட பதவிகளின் விவரம்	41–42
8.	ஒழுங்குமுறை நடவடிக்கை/மேல்முறையீடு/சீராய்வு மனு/ மறுஆய்வு மனு/ பணப்பிடித்தம்/ஓய்வூதியக் குறைப்பு மற்றும் பிற விவரங்கள்	43–46
9.	தேர்வாணையத்தின் இசைவு வழங்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட விவரங்கள்	46–49
10.	இணைக் கல்வித் தகுதி கூட்டங்கள் மற்றும் பாடத் திட்ட மறு சீராய்வு குழு கூட்டங்கள் பற்றிய விவரங்கள்	50–51

11.	தேர்வாணையத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பட்டியல் (1930 முதல்)	52–57
12.	கடந்த ஆறு ஆண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்தது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசு முடிவெடுத்த நிகழ்வுகள்	58
13.	வரைபடங்கள்	59–60

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

2017–2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

முன்னுரை:-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 315–ன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் பதவி ஒன்றும், உறுப்பினர் பதவி பதினான்கும் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். ஆண்டறிக்கை காலத்தில், தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாண்டறிக்கை காலத்தில் தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

முனைவர்.க.அருள்மொழி, இ.ஆ.ப., (ஓய்வு)	தலைவர்
முனைவர்.மு.ராசாராம்., இ.ஆ.ப., (ஓய்வு)	உறுப்பினர்
முனைவர்.பெ.கிருஷ்ணகுமார், பி.இ., எம்.பி.ஏ., எம்.பில்., எம்சிஎஸ்டி (யுஎஸ்ஏ), பிடிஎப்எல் (மலேசியா)., எம்ஐஇஇஇ., பி.எச்.டி.,	உறுப்பினர்
திரு.அ.சுப்ரமணியன், பி.இ., எம்.ஐ.இ.,	உறுப்பினர்
திரு.வெ.சுப்பையா, எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு.ஏ.வி.பாலுசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,	உறுப்பினர்

செயலாளர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்:–

திரு.மா.விஜயகுமார், இ.ஆ.ப., (15.11.2012 அன்று பணியேற்றார்)	செயலாளர்
திருமதி.வெ.சோபனா, இ.ஆ.ப., (10.10.2012 அன்று பணியேற்றார் பணியேற்ற நாள் முதல் 04.01.2018 வரை)	தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்
திரு.ஆர்.சுதன், இ.ஆ.ப., (10.01.2018 அன்று பணியேற்றார்)	தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

மார்ச் 31, 2018 அன்றுள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பிற்சேர்க்கை I–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி–I

செயல்பாடுகள் மற்றும் கடமைகள்:–

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 320–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது பணிகள் மற்றும் செயல்பாடுகளை ஆற்றுகிறது. பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கானத் தெரிவு விதிகள், பணி நியமனம், பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல் போன்றவற்றில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக மாநில அரசுக்கு அறிவுரை வழங்குகிறது. மேலும், மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளுக்கு உரிய நேரடி நியமனத்திற்கான போட்டித் தேர்வுகள், அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகள், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநில குடிமைப் பணி அதிகாரிகளுக்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் டேராடூனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கானத் தேர்வையும் அக்கல்லூரியின் சார்பாக தேர்வாணையம் நடத்துகிறது.

தேர்வு மற்றும் இதர பணிகள்:–

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம் பின்வருமாறு:–

I. நேரடி நியமனத் தேர்வுகள்:–

1. முதனிலைத் தேர்வுகள்:–

தேர்வுகளின் எண்ணிக்கை	..	2
(1) உதவி ஆணையர் , இந்து சமய அறநிலையத் துறை	..	
(2) உதவி வனப் பாதுகாவலர்	..	
காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை	..	17
விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	..	19,829

2. முதன்மைத் தேர்வுகள்:–

தேர்வுகளின் எண்ணிக்கை	..	23
காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை	..	12,215
விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	..	30,82,629

3. வாய்மொழித் தேர்வுகள்:–

தேர்வுகளின் எண்ணிக்கை	..	23
காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை	..	2,057
வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	..	4,235

4. இறுதித் தெரிவுகள்:–

முற்றிலுமாக இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை	..	30
காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை	..	8,204
இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	..	8,117

II. இதரத் தேர்வுகள்:-

1. துறைத் தேர்வு-2017:-

விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	..	1,37,320
தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை	..	97,081
தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை	..	50,204

2. அரையாண்டுத் தேர்வுகள்:-

ஏப்ரல் 2017 தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	..	53
செப்டம்பர் 2017 தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	..	70

III. பிற பணிகள்:-

1	பணி மாறுதல் அல்லது பதவி உயர்வின் மூலம் நியமனம்	..	738 நபர்கள்
2..	கல்வித் தகுதி/வயது தொடர்பான விதிகளைத் தளர்த்தி பணிமாறுதல் அல்லது பதவி உயர்வு மூலம் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	..	4
3.	ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள்: தேர்வாணையத்தின் கருத்துக்கள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை	..	361
4.	அமைச்சுப் பணியில் ஒரு அலகு துறையிலிருந்து மற்றொரு அலகு துறைக்கு ஒரு வழி மாறுதல் அளித்தல்	..	117 நபர்கள்
5.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 10% மற்றும் 20% இட ஒதுக்கீட்டில் விதி 16(b)-ன் கீழ் இசைவு வழங்கப்பட்ட நேர்வுகள்	..	251 நபர்கள்
6.	ஒழுங்குமுறை விதி 16(b)-ன் பிற்பகுதியின் கீழ் இசைவு அளிக்கப்பட்டவை (விவரங்கள் பிற்சேர்க்கை IX-ல் கொடுக்கப்பட்டுள்ளன)	..	1228 நபர்கள்
7.	வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)	..	
	வரவு	..	3,41,267
	செலவு	..	6,42,186
	(வரவு மற்றும் செலவின விவரங்கள் பிற்சேர்க்கை II-ல் கொடுக்கப்பட்டுள்ளன)		

8. அறிவிக்கைகள்:-

76 வகையான பதவிகளுக்கான 12,132 காலிப்பணியிடங்களுக்கு 17 அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 31,39,975 ஆகும்.

(விவரங்கள் பிற்சேர்க்கை IV-ல் கொடுக்கப்பட்டுள்ளன)

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பிற்சேர்க்கை XIII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. சீர்திருத்த நடவடிக்கைகள்/மறு சீரமைப்புகள்:-

(1) கூடுதல் பயன்பாடுகளுடன் மேம்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் தன்விவரப் பக்கம் [Candidates' Enhanced Dash Board] :-

விண்ணப்பதாரர்கள் தங்களுக்கான பிரத்யேக தன்விவரப்பக்கத்தினை ஒருமுறை பதிவு முறையில் பதிவு செய்து, தனித்துவ உள்ளீட்டு குறியீடு (Login id) மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கிக்

கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த தன்விவரபக்கத்தில் கூடுதல் வசதியாக தற்போது, விண்ணப்பதாரர்கள் தாங்கள் 2012-ம் ஆண்டு முதல் தேர்வாணையத்திற்குச் சமர்பித்துள்ள விண்ணப்பங்கள் (Application History) பற்றிய விவரங்களான, அறிவிக்கை எண், விண்ணப்பித்துள்ள பதவியின் பெயர், பதிவு எண், விண்ணப்ப எண் மற்றும் விண்ணப்பித்த தேதி ஆகியன பட்டியலிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்விவரங்களைத் தேர்வாணைய இணையதளங்கள் வாயிலாக விண்ணப்பதாரர்கள் 24x7 என்னும் முறையில் எப்போது விரும்பினாலும் பார்த்துக் கொள்ளலாம். இதன் மூலம் தாங்கள் விண்ணப்பித்துள்ள தேர்விற்கான விண்ணப்ப எண் மற்றும் பதிவு எண் ஆகியவற்றை தேர்வாளர்கள் தவற விட்டிருப்பினும் தாங்களாகவே தெரிந்துகொள்ள ஏதுவாக இந்த கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் தேர்வர்களின் நிலையினை அவர்களாகவே தெரிந்துகொள்ளும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

(2) பட்டய, பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரிக்கான தேர்வாணையத்தின் போட்டித் தேர்வுக்கான பாடதிட்டமானது கடைசியாக 2000 மாவது ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது. நீண்டகால இடைவெளிக்கு பிறகு இந்த ஆண்டறிக்கை காலத்தில் இப்பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டது.

(3) இந்த ஆண்டறிக்கைக்குரிய காலத்தில் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரை மேம்படுத்தப்பட்டு தேர்வாணைய வளைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(2) இணைய தளம் மூலம் சான்றிதழ் சரிபார்ப்பு **(Online Certificate Verification)**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்ந்தெடுத்த (Short listed) விண்ணப்பதாரர்களுடைய மூல சான்றிதழ்களை இணைய தளம் மூலம் சரிபார்ப்பதற்காக ஒரு புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் கொடுத்துள்ள தகவல்களை உறுதி செய்யும் வகையில் இணையதளம் மூலம் பதிவேற்றம் (Scanning and Uploading) செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள் முடிவடைந்தவுடன், தேர்வாணையம் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து, இணையதள விண்ணப்பங்களில் பதியப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியாக இருக்கும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களை மட்டும் நேரில் வருமாறு அறிவுறுத்துகிறது. இந்த புதிய முறையில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் வாய் மொழி தேர்வு மற்றும் கலந்தாய்வின் போது சான்றிதழ்கள் சரிபார்பதற்காக தேர்வாணையம் வந்தால் போதுமானது. சான்றிதழ்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் (Scanning and Uploading) செய்யும் பணி தமிழ்நாடு அரசு கேபிள் தொலைக்காட்சி (Tamil Nadu Arasu Cable TV) மூலம் நடத்தப்படும் வட்டம் மற்றும் மாவட்ட தலைமையிடங்களில் நிறுவப்பட்டுள்ள அரசு இ-சேவை மையங்களிடம் **(Arasu e-Seva Centers)** ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பகுதி-II

நேரடித் தெரிவுகள்

ஆண்டறிக்கைக்குரிய காலத்தில், தேர்வாணையம் 8204 காலிப் பணியிடங்களுக்கான 30 தெரிவுகளை முழுமையாக முடிவு செய்து, இறுதியாக 8117 விண்ணப்பதாரர்களை பணிநியமனத்திற்குத் தேர்ந்தெடுத்தது. இறுதி முடிவு செய்த 30 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பிற்சேர்க்கை-III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

முதல்நிலைத் தேர்வு:-

ஆண்டறிக்கைக்குரிய காலத்தில், உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் உதவி வனப் பாதுகாவலர், வனத் துறை, பணிகளுக்கான 17 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக முதல்நிலைத் தேர்வினை தேர்வாணையம் நடத்தியது. இத்தேர்விற்கு 19,829 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

முதன்மைத் தேர்வு:-

ஆண்டறிக்கைக்குரிய காலத்தில், பல்வகைப் பணிகளில் 12,215 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 23 முதன்மைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்தியது. இம்முதன்மை தேர்வுகளுக்கு 30,82,629 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

நேர்முகத் தேர்வு:-

ஆண்டறிக்கைக்குரிய காலத்தில், 2057 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான 23 தெரிவுகளுக்கு நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. தேர்வாணையம், 58 வேலை நாட்களில் நேர்முகத் தேர்வுகளை முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடத்தியது. சில நாட்களில் அதிகளவாக 6 குழுமங்கள் முற்பகலிலும் பிற்பகலிலும் அமைக்கப்பட்டன. நடப்பு ஆண்டில், 58 வேலை நாட்களில் மொத்தம் 478 குழுமங்கள் அமைக்கப்பட்டு 4235 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஆண்டறிக்கைக்குரிய காலத்தில் நடந்த முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுகளின் விவரங்கள் பிற்சேர்க்கை V -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி-III

தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாமை:-

ஆண்டறிக்கைக்குரிய காலத்தில் 77 காலிப்பணியிடங்கள் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் நிரப்பப்படவில்லை. அவை பின்வருமாறு:-

தொகுதி-IV (2014-2016) -ல் நேர்முக எழுத்தர்-6, தொகுதி IV (2015-2016)ல் தட்டச்சர்-12, வட்டார சுகாதார புள்ளியியலாளர்-2, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III - 57.

வகுப்பு வாரியான விவரங்கள் பிற்சேர்க்கை VI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி- IV

பணிமாறுதல் மூலம் நியமனம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல், ஒழுங்குமுறை நடவடிக்கை நேர்வுகள், மேல்முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை விதிகள், ஒழுங்குமுறைகள், தற்காலிக நியமனங்கள் மற்றும் பிற:

1. பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு மூலமாகத் தெரிவு:-

அறிக்கைக்குரிய காலத்தில் தொடர்புடைய சார் நிலைப்பணிகளிலிருந்து மாநிலப் பணிகளுக்கு பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளில் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை தேர்வாணையம் ஆய்வு செய்து 20 பணிகளில், பணியமர்த்த தகுதியும், பொருத்தமும் உடைய 738அலுவலர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பிற்சேர்க்கை VII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள், மேல்முறையீடுகள், மனுக்கள் மற்றும் பிற:-

அ.	(i)	அறிக்கைக்குரிய காலத்தில் ஆய்ந்த நேர்வுகளின் எண்ணிக்கை	:	591
	(ii)	(அ) தேர்வாணையம் தீர்வு செய்த நேர்வுகளின் எண்ணிக்கை	:	361
		ஆ) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள நேர்வுகளின் எண்ணிக்கை	:	22
		(இ) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை	:	9
		(ஈ) ஆவணங்கள் கோரி அரசுக்குத் திருப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை	:	199
	(iii)	தண்டனையில் மாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை	:	32
ஆ.	(i)	அரசுக்கு, தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை	:	361
	(அ)	அரசு ஆணை பிறப்பித்த நேர்வுகளின் எண்ணிக்கை	:	175
	(ஆ)	அரசு ஆணை பிறப்பிக்க வேண்டிய நேர்வுகளின் எண்ணிக்கை	:	186

ஒழுங்கு நடவடிக்கை, மேல்முறையீட்டு மனு, சீராய்வு மனு, மறுஆய்வு மனு, பணப்பிடித்தம், ஓய்வூதியம் குறைப்பு ஆகியவைகளில், அலுவலர்கள் நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட

குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட நேர்வுகள் என 361 நேர்வுகளின் விவரம் பிற்சேர்க்கை-VIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் பிற:-

மாநில, சார்நிலை, அமைச்சு மற்றும் தலைமைச் செயலக பணிகளில் நியமனம் செய்ய இசைவு கோரப்பட்ட 1228 நிகழ்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(b)-ன் பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டது.

இசைவு அளிக்கப்பட்ட பதவிகள் மற்றும் பணிகளின் விவரங்கள் துறை வாரியாக பிற்சேர்க்கை IX -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. தற்காலிக நியமனங்கள்:-

தற்காலிக நியமனம், நீட்சி செய்யப்பட்ட நேர்வுகளில் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :-

காலம்	இசைவு அளிக்கப்பட்டது		இசைவு மறுக்கப்பட்டது	
	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்
(1)	(2)	(3)	(4)	(5)
3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள்	1	-	-	-
12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள்	-	-	-	-
18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள்	-	-	-	-
24 மாதங்களுக்கு மேல்	-	-	-	-
மொத்தம்	1	-	-	-

5. தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20(a)(iii)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:-

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20(a)(iii)-ன் படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஒரு துறை அலகிலிருந்து மற்றொரு துறை அலகிற்கு 117 பணியாளர்களுக்கான நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையம் இசைவளித்தது.

6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:-

ஆண்டறிக்கை காலத்தில் 50 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் 44 நேர்வுகளில் விதிகள் வெளியிடப்படும் முன் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட்டது. 6 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. இருப்பினும், அந்த 6 நேர்வுகளில் தேர்வாணைய உள்ளீட்டு எல்லைக்கு உட்படாத பதவிகளுக்கு உரியதாகவோ அல்லது இந்திய அரசியலமைப்பு சட்ட பிரிவுக்கூறு 320(3)-ன்படி தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்பட தேவையில்லாததாகவோ அமைந்துள்ளன.

பகுதி-V

இதரத் தேர்வுகள்

I. துறைத்தேர்வுகள்:-

2017-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 300 தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 1,37,320 நபர்கள் விண்ணப்பித்தனர். அதன் விவரம் பின்வருமாறு:-

வ.எண்.	விவரம்	மே-2017	டிசம்பர்–2017
1.	மொத்த பாடங்களின் எண்ணிக்கை	148	140
2.	தேர்வு தாள்களின் எண்ணிக்கை	155	145
3.	விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை	82,675	54,645
4.	தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை	55,104	41,977
5.	தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை	35,852	14,352
6.	தேர்ச்சி விகிதம்	65.06 %	34.19 %

II. அரையாண்டுத் தேர்வுகள்:-

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு முதல்நிலை தமிழ் மொழித் தேர்வுகள் அடங்கிய அரையாண்டுத் தேர்வு ஏப்ரல் 2017 மற்றும் செப்டம்பர் 2017-இல் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளில் முறையே 53 விண்ணப்பதாரர்களும் மற்றும் 70 விண்ணப்பதாரர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

III. இந்திய அரசின் இராணுவ கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கான தேர்வு:-

தேர்வாணையம் டேராடூனில் உள்ள இந்திய அரசின் இராணுவக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கானத் தேர்வை அக்கல்லூரியின் சார்பாக 2017-ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடத்தியது. அவற்றில் 130 மாணவர்கள் ஜூன் மாதத்திலும் 148 மாணவர்கள் டிசம்பர் மாதத்திலும் கலந்துகொண்டனர்.

பகுதி - VI

அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டு முடிவெடுத்தவை:-

அறிக்கைக்குறிய காலத்தில், தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 16 நேர்வுகளில் மாறுபட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

நேர்வு - 1

அரசாணை (D) எண்.1483, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (I - 1)த் துறை, நாள் 20.07.2017

செல்வி எல்.பிரியா பாய் (மேல்முறையீட்டாளர்) முன்னாள் செவிலியர், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அவர்கள் வேலை பெறும் பொருட்டு தவறான இனச் சான்றிதழ் சமர்ப்பித்தது தொடர்பாக தனியர் மீது மருத்துவ கல்வி இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு குடிமைப் பணிகள்(ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b) -ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தி குற்றச்சாட்டுக் குறிப்பாணை வழங்கினார்.

ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் மருத்துவ கல்வி இயக்குநர் அவர்கள், செல்வி L. பிரியா பாய், முன்னாள் செவிலியர், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை சென்னை அவர்களுக்கு “பணி நீக்கம் “ எனும் தண்டனை வழங்கினார். மேல் முறையீட்டாளர், அதனை எதிர்த்து அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளார்.

மேல் முறையீடு ஏற்கப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து, 1954ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 18(1)(a) -ன் கீழ் கோரப்பட்டது.

தேர்வாணையம் தனது ஆலோசனையை பின்வருமாறு வழங்கியுள்ளது:-

“அரசுப் பணியில் புதிதாக நுழைந்துள்ள மேல்முறையீட்டாளருக்கு மதம் மாறுவதால் சந்திக்க நேரிடும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வு இல்லாதிருந்திருக்கலாம். மேற்குறிப்பிட்ட மேல்முறையீட்டாளரின் செயலால் அவர் அரசு அலுவலர்கள்/ அரசை உள்நோக்குடன் ஏமாற்றியிருக்கிறார் என்ற முடிவுக்கு வர இயலாது.

இப்பொருள் குறித்து தேர்வாணையம் ஆழமாக விவாதித்து, முடிவெடுத்து மேல்முறையீட்டாளருக்கு பாபுஜி மெமோரியல் மேல்நிலைப் பள்ளி, மணவாளக்குறிச்சியில் வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழில் மேல்முறையீட்டாளர், இந்தியன், இந்து, சாம்பவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் எனத் தெளிவாக குறிப்பிடடுள்ளார். எனவே, தேர்வாணையம் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை அனுமதித்து அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது”.

அரசு, செல்வி.L.பிரியா பாய் அவர்களின் மேல்முறையீடு மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றை கவனமாகவும், சுயமாகவும் தேர்வாணையத்தின் கருத்துடன் பரிசீலித்தது. அரசாணை (2D) எண்.108, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (CV-1) துறை, நாள் 12.09.2007-ன்படி, தனியர் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்தவரா இல்லையா எனத் தீர்மானிக்கும் முழு அதிகாரமும் மாநில விழிப்புணர்வு குழுவுக்கு மட்டுமே உள்ளது, மற்றும் அதன் தொடர்பான மேல்முறையீடானது இந்திய அரசியலமைப்புச் சட்ட ஷரத்து 226-ன்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் மட்டுமே செய்ய இயலும் எனக்கருதி அரசு தேர்வாணையத்தின் முடிவிலிருந்து மாறுபட்டு,செல்வி. L.பிரியா பாய், முன்னாள் செவிலியர், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அவர்களின் மேல்முறையீட்டை நிராகரித்து ஆணையிட்டுள்ளது.

நேர்வு - 2

அரசாணை(டி) எண்.603, உள்(காவல் 2)துறை, நாள் 16.05.2017

நீலகிரி மாவட்ட ஆயுதப்படையில் துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் திரு.T.திருமாவளவன் என்பவர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையான அன்னாரின் “ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஒரு வருட காலத்திற்கு நிறுத்தம்” எனும் தண்டனை தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியது.

தேர்வாணையம் தனது 26.07.2016 நாளிட்ட கடிதத்தில் அன்னாரின் மேல்முறையீட்டு மனுவை அனுமதித்து வழங்கப்பட்ட தண்டனையான அடுத்த ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி ஒரு வருடத்திற்கு தள்ளி வைக்கலாம் என்ற தண்டனையை ரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அரசு அரசாணை(டி)எண்.603, உள்(காவல்.2) துறை, நாள் 16.05.2017-ல் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனையான அன்னாரின் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஒரு வருடத்திற்கு தள்ளி வைக்கலாம் என்ற தண்டனையை மாற்றி ‘கண்டனம் ‘ எனும் தண்டனையை வழங்கியது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 3

அரசாணை (டி) எண்.237 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(எண்1) துறை, நாள் 21.04.2017

திருமதி.ப.மாலினி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், தொழிற் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-32 என்பவர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையான “ஊதிய உயர்வு இரண்டு ஆண்டுகளுக்குத் திரண்ட

பயனின்றி நிறுத்தம்'' எனும் தண்டனையை எதிர்த்து அளித்த மனுவின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் தனது 28.11.2016 நாளிட்ட கடிதத்தில் அன்னாரின் மனுவை அனுமதித்து, அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ள "ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்குத் திரண்ட பயனின்றி நிறுத்தம்'' எனும் தண்டனையினை ரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசாணை (டி) எண்.237 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எண்1) துறை, நாள் 21.04.2017-ல் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஏற்கனவே அன்னாருக்கு விதிக்கப்பட்ட "அடுத்த ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்குத் திரண்ட பயனின்றி நிறுத்தம்'' எனும் தண்டனையை உறுதி செய்து, தனியரது மனுவினை நிராகரித்து ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 4

அரசாணை(டி)எண்.231. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை. நாள; 11.05.2017

அரசு, திருமதி.ஜி.முத்துமீனாள், முன்னாள் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சி முகமை,தேனி மாவட்டம், தற்போது ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் என்பவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதியில் வழங்கப்பட்ட தண்டனையான 'கண்டனம்' எனும் தண்டனையினை எதிர்த்து அளித்த மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களை அனுப்பிவைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியது.

தேர்வாணையம் 13.06.2012 நாளிட்ட கடிதத்தின் மூலம் அன்னாரின் மேல்முறையீட்டினை நிராகரித்து 'கண்டனம்' எனும் தண்டனையினை உறுதி செய்து அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

இந்நிலையில், அரசு 29.09.2014 நாளிட்ட கடிதத்தின் மூலம் மேல்முறையிட்டாளர் அளித்த கூடுதல் விவரத்தின் அடிப்படையில் தலைமைச் செயலக அறிவுரைகளில் அறிவுரை 95(a)-ன் கீழ் தேர்வாணையத்தின் திருந்திய கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் 07.01.2015 நாளிட்ட கடிதத்தின் மூலம் ஏற்கனவே அரசுக்கு தெரிவித்திருந்த கருத்தான அன்னாரின் மேல்முறையீட்டினை நிராகரித்து 'கண்டனம்' எனும் தண்டனையினை மீண்டும் உறுதி செய்து தேர்வாணையத்தின் கருத்தாக அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு, தேர்வாணையக் கருத்தினை ஏற்று அரசாணை(ப) எண்.213, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள் 16.04.2015 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

மனுதாரர் மேற்கண்ட அரசாணையினை எதிர்த்து 07.07.2015 நாளிட்ட மனுவினை அரசுக்கு சமர்ப்பித்ததை அடுத்து அன்னாருக்கு நேர்கேட்பு விசாரணை நடத்தப்பட்டு பின்பு மனுதாரர் 20.10.2016 நாளிட்ட கடிதத்தினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ள புதிய கருத்துக்களை ஏற்று அதன் மீது அரசு 15.12.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது.

தேர்வாணையம் மீண்டும் அன்னாரின் மனுவினை நிராகரித்து, ஏற்கனவே அரசுக்கு தெரிவித்திருந்த கருத்தினை உறுதி செய்து அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

தற்போது அரசு, அரசாணை(டி)எண்.231, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள் 11.05.2017 மூலம் தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு அன்னாரின் மனுவினை ஏற்று வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையினைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அரசு தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 5

அரசாணை(2ப)எண்.1, மாற்றுத்திறனாளிகள் நலத் (அநமு) துறை, நாள் 31.01.2018

திருமதி.அ.சகுந்தலா, அலுவலக உதவியாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை என்பவர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையான 'ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி மூன்று மாதங்களுக்கு நிறுத்தம்' எனும் தண்டனையை எதிர்த்து அளித்த மேல்முறையீட்டின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் தனது 13.10.2017 நாளிட்ட கடிதத்தில் அன்னாரின் மேல்முறையீட்டினை அனுமதித்து அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ள 'ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி மூன்று மாதங்களுக்கு நிறுத்தம்' எனும் தண்டனையினை ரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை தெரிவித்தது. ஆனால், அரசு அரசாணை(2ப) எண்.1, மாற்றுத்திறனாளிகள் நலத்(அநமு) துறை, நாள் 31.01.2018-ல் தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு அன்னாருக்கு விதிக்கப்பட்ட 'ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைத்து ஆணையிடப்பட்ட தண்டனையினை எதிர்த்து மேல்முறையீட்டாளர் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டினை நிராகாரித்து ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 6

அரசாணை(ப)எண்.55, சுற்றலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி2-1) துறை, நாள் 30.03.2017

திரு.எஸ்.இராமகிருஷ்ணன்,செயல் அலுவலர் (நிலை-III) (பணியறவு) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம் வட்டம் மற்றும் நகர், காந்திபுரம், கிராஸ்கட் ரோடு என்பவர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையான 'பணியறவு' எனும் தண்டனையை எதிர்த்து அளித்த மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையத்தின் 14.12.2015 நாளிட்ட கடிதத்தில் அன்னாரின் மேல்முறையீட்டினை அனுமதித்து அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ள ' பணியறவு' எனும் தண்டனையினை ரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அரசு அரசாணை (ப) எண்.55, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி2-1) துறை, நாள் 30.03.2017-ல் தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு ஏற்கனவே அன்னாருக்கு விதிக்கப்பட்ட ' பணியறவு' எனும் தண்டனையினை உறுதி செய்து, தனியரது மேல்முறையீட்டினை நிராகரித்து ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 7

அரசாணை (டி) எண்.590, மக்கள் நல வாழ்வு மற்றும் குடும்ப நலத் (K2) துறை, நாள் 15.03.2017

மரு.A.உலகம்மாள், முதுநிலை குடிமை மருத்துவர், தென்காசி அரசு மருத்துவமனை, தென்காசி மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதியில் எடுக்கப்பட்ட உத்தேச தண்டனையான 'கட்டாய ஒய்வு ' எனும் தண்டனை தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் தனது 18.05.2016 நாளிட்ட கடிதத்தில் அன்னாருக்கு வழங்கப்பட்ட தண்டனையான 'கட்டாய ஒய்வு' எனும் தண்டனையை ரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு அரசாணை (டி) எண்.590, மக்கள் நல வாழ்வு மற்றும் குடும்ப நலத் (K2) துறை, நாள் 15.03.2017-ல் தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு, அரசு ஏற்கனவே உத்தேசித்த தண்டனையான 'கட்டாய ஒய்வு' எனும் தண்டனையை உறுதி செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 8

அரசாணை (டி) எண்.52, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை நாள், 27.07.2017

இவ்வழக்கில் திரு.கிருஷ்ணன் பிச்சை, பிரிவு அலுவலர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அவருக்கு வழங்கப்பட்ட 'ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஒரு மாதத்திற்கு

நிறுத்தம்' எனும் தண்டனையை எதிர்த்து செய்து கொண்ட மறு ஆய்வு மனுவின் மீது அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்களை கோரியது.

தேர்வாணையம் தனது 12.06.2017 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு கருத்துக்களை வழங்கியது:-

“மறு ஆய்வு மனுதாரர் தனது 24.06.2016 நாளிட்ட கடிதத்தில் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்க மறுத்து விளக்கம் அளித்துள்ளார். வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் OP.148 மற்றும் 149 நாள் 06.06.2016 மூலம் வணிகவரி மற்றும் பதிவுத் துறையில் பணி வழங்கிய நிலையில் மனுதாரர் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையிலேயே பணி செய்துள்ளார். மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் இருந்து தன்னிச்சையாக விடுவித்து கொண்டார் என்பதே மறு ஆய்வு மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு ஆகும்.

மேலும், மறு ஆய்வு மனுதாரர் சார் செயலாளர் (அ செ), வணிகவரி மற்றும் பதிவுத் துறை அவர்கள் உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தினார் என குற்றச்சாட்டுக் குறிப்பாணைக்கு அளித்துள்ள விளக்கத்தில் தெரிவித்துள்ளார். மேலும், 20 ஆண்டுகள் அரசுப் பணியை எந்த ஒரு குற்றச்சாட்டுக் குறிப்பாணை பெறாமல் செவ்வனே செய்துள்ளதாகவும், உயர் அலுவலர்களின் ஆணைகளை மதித்து நடந்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மறுஆய்வு மனுதாரர் தற்போதும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் பணி செய்கிறார். அன்னாருக்கானத் தண்டனையை மாற்றுத் திறனாளிகள் நலத் துறையே வழங்கியுள்ளது. மறு ஆய்வு மனுதாரர் தனது மறு ஆய்வு மனுவில் 03.06.2016 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (H1) துறையின் அலுவலக நடைமுறை கடிதத்தின் பேரிலும், சார் செயலாளரின் வாய்மொழி அறிவுறுத்தலின் பேரிலும், 06.06.2016 அன்று வணிகவரி மற்றும் பதிவுத்துறையில் பிரிவு அலுவலர் பணியில் சேர்ந்ததாகக் கூறியுள்ளார்.

மேற்கண்டவற்றைக் கருத்தில் கொண்டு, தேர்வாணையம் மறு ஆய்வு மனுதாரரின் மனுவை அனுமதிக்கலாம் என்றும், மறு ஆய்வு மனுதாரருக்கு வழங்கப்பட்ட ‘ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஒரு மாதத்திற்கு நிறுத்தம்' எனும் தண்டனையை ரத்து செய்யலாம் எனவும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுப்பட்டு அரசாணை (டி) எண்.52, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை நாள் 27.07.2017-ல் அன்னாருக்கு வழங்கப்பட்ட ‘ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஒரு மாதத்திற்கு நிறுத்தம்' எனும் தண்டனையை உறுதி செய்தும், மறு ஆய்வு மனுவை நிராகரித்தும் ஆணை வெளியிட்டுள்ளது. இவ்வாறாக திரு.கிருஷ்ணன் பிச்சை, பிரிவு அலுவலர் என்பவரின் மறு ஆய்வு மனுவின் மீது தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுப்பட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 9

அரசாணை (ப) எண்.56 (ம) 57, பொதுப்பணி (E2)த் துறை, நாள் 10.03.2017

திரு.ஜி.ராஜாமணி, செயற்பொறியாளர் (ஓய்வு) மற்றும் திரு.சி.கோதண்டபாணி, உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) ஆகியோர்கள் வேலூர் மாவட்ட பதளபல்லி கிராமத்தில் மாலத்தாரில் நீர்த்தேக்கத்தை உருவாக்குவதிலும் நீரோட்டத்திற்கு வட்டபாத்தி மற்றும் கால்வாய்களை உருவாக்குவதிலும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்க தவறியதால் தேவையற்ற செலவினங்கள் ஏற்பட்டு அரசிற்கு ரூ.51.82 லட்சம் இழப்பு ஏற்படுத்தியமைக்காக மேற்குறிப்பிட்ட இரு அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதியில் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக அரசிற்கு ஏற்பட்ட இழப்புத் தொகையான ரூ.51.82 லட்சத்தை மேற்படி இரு அலுவலர்களிடமிருந்தும் தலா ரூ.25.91 இலட்சம் பணப்பிடித்தம் செய்யலாம் என்றும், அதாவது திரு.ஜி.ராஜாமணி, செயற்பொறியாளர்(ஓய்வு) அவர்களிடமிருந்து அவரது ஓய்வூதியத்திலிருந்து 134 தவணைகளில் அதாவது ரூ.9,500/-ஐ முதல் தவணையிலும், மாதம் ரூ.15,000/- வீதம் 133 தவணைகளிலும் பிடித்தம் மற்றும் ரூ.5,86,500/-ஐ தனியரின் பணிகொடை முழுவதையும் பிடித்தம் செய்யலாம் என்றும், திரு.சி.கோதண்டபாணி, உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களிடமிருந்து அவரது ஓய்வூதியத்திலிருந்து 140 தவணைகளில் அதாவது ரூ.4,500/-ஐ முதல் தவணையிலும், ரூ.15,000/- வீதம் 139

தவணைகளிலும், ரூ.5,01,500/- ஐ அவரின் பணிக்கொடை முழுவதும் பிடித்தம் செய்யலாம் என்றும் முடிவு செய்து, அவ்வுத்தேச முடிவின் மீது 1954-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(c)-ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

வேலூர் மாவட்ட பதளபல்லி கிராமத்தில் மாலத்தார் முழுவதும் நீர்த்தேக்கத்தை அமைப்பதற்கு வட்டபாத்தி மற்றும் கால்வாய் வேலைகளை உருவாக்கியதில் அரசிற்கு எந்தவித இழப்பும் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களால் ஏற்படவில்லை என்பதால், அவர்களிடமிருந்து மேற்கூறிய அரசிழப்பு தொகையை பிடித்தம் செய்யத் தேவையில்லை என்றும், ஆனால் விதிகளை மீறியமைக்காக குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களுக்கு வேறு ஏதாவது தண்டனையை வழங்கலாம் என்றும் தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு, அரசிழப்பு தொகை ரூ.51.82 லட்சத்தை சரிசமமாக குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களின் ஓய்வூதியத்திலிருந்தும் பணிக்கொடை முழுவதும் பிடித்தம் செய்யலாம் எனும் அரசின் உத்தேச தண்டனையை உறுதி செய்து அரசாணை (ப) எண்.56 (ம) 57, பொதுப்பணி (E2)த் துறை, நாள் 10.03.2017-ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளன.

நேர்வு - 10

அரசாணை (டி) எண்.479, உள் (காவல் 2)த் துறை, நாள் 18.04.2017

திரு.P.A.கணேசன், துணைக் காவல் கண்காணிப்பாளர், மாவட்ட குற்ற ஆவணக்கூடம், அரியலூர் மாவட்டம், முன்னாள் காவல் ஆய்வாளர், ஆண்டிமடம் காவல் நிலையம், அரியலூர் மாவட்டம் என்பவர் மீது அவரது பணியில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(a)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, அவ்வொழுங்கு நடவடிக்கைக்குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக தனியரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்தம் செய்யலாம் எனும் தண்டனை காவல் துறை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இத்தண்டனையினை எதிர்த்து, தனியர் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளார். அரசு, அம்மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களைத் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து, 1954-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(a) -ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் இவ்வழக்கு தொடர்புடைய ஆவணங்களை கவனமுடன் ஆய்வு செய்து தனியரது மேல்முறையீட்டினை அனுமதித்து தனியருக்கு வழங்கப்பட்டுள்ளத் தண்டனையை இரத்து செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு தனியருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையான “ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்தம்” என்பதனை “கண்டனம்” எனும் தண்டனையாக மாற்றி அரசாணை (டி) எண்.479, உள்(காவல்.2)த் துறை, நாள் 18.04.2017-ன் வாயிலாக ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு திரு.P.A.கணேசன், துணைக்காவல் கண்காணிப்பாளர், மாவட்ட குற்ற ஆவணக்கூடம், அரியலூர் மாவட்டம், முன்னாள்காவல் ஆய்வாளர், ஆண்டிமடம் காவல் நிலையம், அரியலூர் மாவட்டம் என்பவர் சமர்ப்பித்த மேல்முறையீடு தொடர்பாக தேர்வாணையம் வழங்கிய கருத்திலிருந்து மாறுபட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 11

அரசாணை (ப)எண்.18, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 2-2) துறை, நாள் 02.02.2017

இவ்வழக்கில், திரு.மா.புகழேந்திரன், இணை ஆணையர் (தற்கால பணிநீக்கம்) என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(ஆ)-வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, இறுதியில் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக “பணிநீக்கம்” (Removal from service") எனும் தண்டனை வழங்க உத்தேச முடிவெடுத்து அவ்வுத்தேச முடிவின் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(b)(iv)-ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

தேர்வாணையம் தனது 23.02.2016 நாளிட்ட கடிதத்தில் ''பணிநீக்கம்'' எனும் தண்டனையை குறைத்து ''கட்டாய ஓய்வு'' என்ற தண்டனை வழங்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு, அரசாணை வெளியிட்டுள்ளதில், தேர்வாணையம் வழங்கிய ஆலோசனையின்படி ''கட்டாய ஓய்வு'' எனும் தண்டனை வழங்குவதற்கு பதிலாக ''பணி நீக்கம்'' எனும் தண்டனை குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 மற்றும் அதனின் கீழ் இயற்றப்பட்டவிதிகளின்படி எந்தவொரு இந்து சமய அறநிறுவனத்திலும் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தி தினக்கூலி / தொகுப்பூதியத்தில் பணியாளர்களை நியமனம் செய்வதற்கு இணை ஆணையர் / துணை ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. திரு.மா. புகழேந்திரன், இணைஆணையர் (தற்கால பணிநீக்கம்) சட்டவிதிகளுக்கு புறம்பாகவும், முறைகேடாகவும் அதிகார துஷ்பிரயோகம் செய்து புதிய பணியிடங்களை ஏற்படுத்தி தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்திட அனுமதி வழங்கியுள்ளார். தனியர் தனது கடமைகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து தவறியுள்ளார் என்பதும், தமிழ்நாடுஅரசுப் பணியாளர் நடத்தை விதி 20-ஐ மீறி செயல்பட்டுள்ளார் என்பதும் ஊர்ஜிதமாகிறது.''

எனவே,மேற்கண்ட காரணங்களினால் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு அரசாணை (ப) எண்.18, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 2-2) துறை, நாள் 02.02.2017 வாயிலாக ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 12

அரசாணை (நிலை) எண்.59, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை, நாள் 22.09.2017

திரு.து.ராஜகுமாரன், (தற்போது மேலவாளாடி ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்) ஊட்டத்தூர், அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி காப்பாளர் மற்றும் கூடுதல் பொறுப்பு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி மாணவர் விடுதி பட்டதாரி காப்பாளராக பணியாற்றிய போது, தவறான நடத்தை அல்லது நெறி தவறி நடத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்காகஅன்னார் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b) -ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாவதாக கருதி, நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு, ஆதிதிராவிடர் நல இயக்குநரால் தனியரின் ''ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி மூன்று மாதங்களுக்கு நிறுத்தம்'' எனும் தண்டனை வழங்கி ஆணையிடப்பட்டது. அத்தண்டனையை ரத்து செய்ய கோரி தனியர் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது, அரசு தேர்வாணையத்தின் கருத்தினை அதன் ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(a)-ன் கீழ் கோரியது.

தேர்வாணையம், ஆதி திராவிடர் நல இயக்குநரால் வழங்கப்பட்ட ''தனியரின் ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி மூன்று மாதங்களுக்கு நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட தண்டனை சரியே என கருதி மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை சாரமற்றதாகக் கருதி நிராகரிக்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கிறது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து பின்வரும் காரணங்களுக்காக மாறுபடுவதாக 22.09.2017 நாளிட்ட அரசாணையில் தெரிவித்துள்ளது.

> இந்நேர்வு தொடர்பான மூல ஆவணங்கள்/ விவரங்களை கவனமுடன்ஆய்வு செய்ததில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மேல்முறையீட்டாளர் மீது புகார் அளித்த மாணவர்களை விசாரணை செய்ய சம்பந்தப்பட்ட திருச்சி, அரசு கலை கல்லூரி, திருச்சி, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி நேஷனல் கல்லூரி மற்றும் புனித வளனார் கல்லூரி ஆகிய கல்லூரி முதல்வர்களிடம் மாணவர்களின் விவரம் கோரப்பட்டதில் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மாணவர்கள் எவரும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வியாண்டுகளில் தமது கல்லூரிகளில் பயிலவில்லையென சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட புகார் தொடர்புடைய பட்டியலில் கண்டுள்ள 18 மாணவர்களில் எவரும் அவ்விடுதியில் தங்கி கல்வி பயிலவில்லை என திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஊட்டத்தூர் டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியின் தற்போதைய காப்பாளர் தெரிவித்துள்ளார். மேலும், புகாரில் உள்ள மாணவர்கள் பற்றிய விவரங்கள் தற்போது விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கோ, விடுதியில் பணியாற்றும் பணியாளர்களுக்கோ தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், துணை இயக்குநர் (கல்வி) ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் அவர்களின் விசாரணை அறிக்கையில், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலக பதிவேடுகளின்படி மேல்முறையீட்டாளரின் கையொப்பமும், பெற்றுக் கொண்ட பணத்தை திருப்பி அளிப்பதாக காப்பாளரால் எழுதப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கடிதத்தில் உள்ள கையொப்பமும் வேறுபாடுடன் உள்ளது. மேலும், புகார் மனுவில் உள்ள முத்திரையும் அவரின் அலுவலக செயல்பாடுகளுக்காக பயன்படுத்தி வந்த முத்திரையும் வெவ்வேறாக உள்ளதால் குற்றச்சாட்டு நிரூபணமாகவில்லை எனத் தெரிவித்துள்ளார்."

மேற்குறிப்பிட்ட காரணங்களால் மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் கூட நிரூபிக்கப்படாத பட்சத்தில், மூன்று மாத ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து வழங்கப்பட்ட தண்டனை நீதிக்கு புறம்பானது எனக் கருதி திரு.து.ராஜகுமாரன், பட்டதாரி ஆசிரியர் அரசுக்கு அளித்துள்ள மேல்முறையீட்டினை அனுமதித்து அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை இரத்து செய்து ஆணையிட்டுள்ளது.

இவ்வாறு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, அரசு, அரசாணை (நிலை) எண்.59, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை, நாள் 22.09.2017 வாயிலாக ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 13

அரசாணை (டி) எண்.604, உள் (காவல் 2) துறை, நாள் 16.05.2017

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் உட்கோட்டத்தில் திரு.டி.வின்சென்ட் ஜெயராஜ், காவல் துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றிய போது பணியில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(அ)-வின் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் காவல் துறைத் தலைவர் அவர்களால் 'கண்டனம்' எனும் தண்டனை வழங்கப்பட்டது. இத்தண்டனையை எதிர்த்து அன்னார் அரசுக்கு மேல்முறையீடு செய்தார். அரசு அம்மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை அதன் ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(a)-ன் கீழ் கோரியது.

தேர்வாணையம், மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை ஏற்று மேல்முறையீட்டாளரை குற்றச்சாட்டிலிருந்து முழுவதும் விடுவிக்கலாம் எனஅரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை நிராகரித்தும், அன்னாருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையை உறுதி செய்தும் அரசாணை (டி) எண்.604, உள் (காவல் 2) துறை, நாள் 16.05.2017 -ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 14

அரசாணை (எம்.எஸ்) எண்.406, பொது (முன்னாள் படைவீரர்) துறை, நாள் 21.04.2016

திரு.எஸ்.எம். அஸ்லாம், முன்னாள் படைவீரர் நல இணை இயக்குநர் என்பவர் மீது அவரது பணியில் மற்றும் நடத்தையில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, அன்னாருக்கு "ஓராண்டு

காலம் அடுத்த கீழ்நிலை பதவிக்கு பதவியிறக்கம்'' எனும் தண்டனை வழங்க அரசு உத்தேசித்து தேர்வாணையத்தின் கருத்தினை அதன் ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(b)(i)-ன் கீழ் கருத்தினைக் கோரியது.

இவ்வொழுங்கு நடவடிக்கை நேர்வின் கண்டறிதல்கள் தள்ளுபடி செய்வதற்குரியது என்றும், குற்ற அலுவலருக்கு "ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஓராண்டு காலம் நிறுத்தி வைத்தல்'' எனும் தண்டனை போதுமானது என தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையம் வழங்கியுள்ள கருத்திலிருந்து மாறுபட முடிவு செய்து, நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக குற்ற அலுவலரை "ஓராண்டு காலம் அடுத்த கீழ்நிலை பதவிக்கு பதவியிறக்கம்'' மற்றும் பதவியிறக்க காலத்தில் அவரது எதிர்கால ஊதிய உயர்வு ஓராண்டு காலம் பின்தள்ளுதல் மற்றும் பதவியிறக்க காலம் அன்னாரால் துய்க்கப்படும் விடுப்பு காலத்தை உள்ளடக்கியது'' எனும் தண்டனை வழங்க முடிவெடுத்து அவ்வாறே அரசாணை (எம்.எஸ்.) எண்.406, பொது (முன்னாள் படைவீரர்) துறை, நாள் 21.04.2016-ல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறாக, அரசு தேர்வாணையம் வழங்கியுள்ள கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 15

அரசாணை (டி) எண்.866, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (இ-2) துறை, நாள் 17.04.2017

நீக்கப்பட்டது.

நேர்வு - 16

அரசாணை (ப) எண்.168, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி2-1) துறை, நாள் 30.11.2017

இவ்வழக்கில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் சுவாமி திருக்கோயிலில் நிலை-2 செயல் அலுவலராக பணியாற்றும் திரு.க.சிவக்குமார், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மாசிலாநாதர் மற்றும் வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் நிலை-4 செயல் அலுவலராகப் பணியாற்றிய போது ஏற்படுத்திய நிர்வாக முறைகேடுகளுக்காக அன்னார்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(ஆ)-ன் கீழ் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு, இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட "ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நான்கு ஆண்டுகளுக்கு நிறுத்தம்'' எனும் தண்டனையை எதிர்த்து, தனியர் அரசுக்கு அளித்த மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன்மீது தேர்வாணையத்தின் கருத்தினை அதன் ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(a)-ன் கீழ் அரசு கோரியது.

தேர்வாணையம், மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் "ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நான்கு ஆண்டுகளுக்கு நிறுத்தம்'' என்ற தண்டனை விகிதம் அதிகமாக இருப்பதால் அதனை தளர்த்தி "ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தம்'' எனும் தண்டனை வழங்கலாம் என தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு தனது கடிதத்தில், மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளும் நிரூபணமான நிலையில், குற்றச்சாட்டுகளின் கடுந்தன்மையினைக் கருதி, அன்னாருக்கு, "ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நான்கு ஆண்டுகளுக்கு நிறுத்தம்'' எனும் தண்டனையை வழங்க உத்தேசித்து, அவ்வுத்தேச முடிவின் மீது தமிழ்நாடு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களில், அறிவுறுத்தம் 95(a)-ன் படி தேர்வாணையத்தின் திருந்திய கருத்தினை கோரியது.

தேர்வாணையம் ஏற்கனவே தெரிவித்தபடி மேல்முறையீட்டாளரது "ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நான்கு ஆண்டுகளுக்கு நிறுத்தம்'' எனும் தண்டனையை தளர்த்தி "ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தம்'' எனும் தண்டனையாக குறைக்கலாம் என முன்னர் அளித்த கருத்துக்களையே மீண்டும் உறுதி செய்து அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து பின்வரும் காரணங்களுக்காக மாறுபடுவதாக 30.11.2017 நாளிட்ட அரசாணையில் தெரிவித்துள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், அருள்மிகு மாசிலாநாதர் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோயில் செயல் அலுவலராக திரு.க.சிவக்குமார் 05.05.2010 அன்று பொறுப்பேற்றுள்ளார். இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 34-ன் படி மூன்றாண்டுகளுக்கு மேல் குத்தகை நீட்டிப்பிற்கு ஆணையரின் அனுமதியும் ஐந்தாண்டுகளுக்கு மேல் குத்தகை நீட்டிப்பதற்கு அரசிடம் அனுமதியும் பெற வேண்டும். மேற்குறித்த சட்ட விதிகளின்படி, குத்தகையினை முடிவுக்கு கொண்டு வந்து நிலத்தினை திருக்கோயில் வசம் பெற இவரது பணிக்காலத்தில் உரிய எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இப்பணியிடத்தில் இவர் பொறுப்பேற்ற பின்னர் திருக்கோயில் தொடர்பான அனைத்து விவரங்களையும் அறிந்து அதன்படி செயல்பட்டிருக்க வேண்டும். நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதனை முடிவுக்கு கொண்டு வர துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். வழக்குகள் குறித்த விவரங்களை தனது மேலதிகாரியிடம் எழுத்துபூர்வமாக எடுத்துரைத்து அவர்களின் அறிவுரைகளைப் பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்திருக்க வேண்டும். எனவே,திரு.க சிவக்குமார், செயல் அலுவலர் (நிலை-2) மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு அன்னாருக்கு நான்கு ஆண்டுகள் திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் என்கிற தண்டனைக்குப் பதிலாக மூன்று ஆண்டுகள் திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையாக வழங்கலாம் என்கிற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஏற்கனவே ஆணையரால் விதிக்கப்பட்ட "ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் நான்கு ஆண்டுகளுக்கு நிறுத்தம்" எனும் தண்டனையினை உறுதி செய்து, தனியரது மேல்முறையீட்டினை நிராகரிக்கலாமென அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிட்டுள்ளது.

இவ்வாறு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு, அரசு அரசாணை (ப) எண்.168, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 2-1) துறை, நாள் 30.11.2017 வாயிலாக ஆணை பிறப்பித்துள்ளது.

நேர்வு - 17

அரசாணை (டி) எண்.35, வணிகவரி மற்றும் பதிவுத் (கே) துறை, நாள் 27.01.2017

இவ்வழக்கில் திருமதி ஆர்.மீனா ராஜசேகரன், முன்னாள் சார்பதிவாளர் என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(ஆ)-வின் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அவருக்கு வழங்கப்பட்ட "கட்டாய ஓய்வு" எனும் தண்டனையை எதிர்த்து செய்து கொண்ட மேல்முறையீட்டின் மீது, அரசு, தேர்வாணையத்தின் கருத்துக்களை கோரியது.

தேர்வாணையம் தனது 11.12.2015 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு கருத்துக்களை வழங்கியது:-

"இவ்வழக்கானது, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரால் பதியப்பட்ட வழக்கினையடுத்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை ஆகும். இவ்வழக்கின் விசாரணை அலுவலர், குற்ற அலுவலர் / மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை என்று தெரிவித்தார்.

ஒழுங்கு நடவடிக்கை அலுவலர், குற்ற அலுவலர் / மேல்முறையீட்டாளர் மீதான குற்றச்சாட்டு குறித்து இறுதி முடிவெடுக்கும் முன் விசாரணை அலுவலர் அறிக்கை பெற குற்ற அலுவலருக்கு உரிமை உள்ள நிலையில், அவ்வுரிமை இவ்வழக்கில் மறுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குற்ற அலுவலர் தன்னை தற்காத்து கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது மறுக்கப்பட்டுள்ள நிலையில் இது இயற்கை நியதி கோட்பாட்டுக்கு எதிரானதாகும்.

மேற்கண்டவை மட்டுமில்லாமல், நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.61/2011-ல்அரசு தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறியதால், சந்தேகத்தின் பலனை குற்ற அலுவலருக்கு வழங்கி நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

மேற்கண்டவற்றைக் கருத்தில் கொண்டு, தேர்வாணையம் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை அனுமதிக்கலாம் என்றும், மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட 'கட்டாய ஒய்வு' எனும் தண்டனையை ரத்து செய்யலாம் எனவும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.''

மீண்டும் அரசு, தனது 09.02.2016 நாளிட்ட கடிதத்தில் தேர்வாணையத்தின் திருத்திய கருத்துக்களைக் கோரியது. தேர்வாணையம் தனது 15.03.2016 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டினை அனுமதித்து அன்னாருக்கு வழங்கப்பட்ட 'கட்டாய ஒய்வு' என்ற தண்டனையினை ரத்து செய்யலாம் என ஏற்கனவே தேர்வாணையம் தெரிவித்த கருத்துக்களை மீண்டும் உறுதி செய்து அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை (டி) எண்.35, வணிகவரி மற்றும் பதிவுத் (கே) துறை, நாள் 27.01.2017-ல் அன்னாருக்கு வழங்கப்பட்ட 'கட்டாய ஒய்வு' (Compulsory Retirement) எனும் தண்டனையை உறுதி செய்தும், மேல்முறையீட்டை நிராகரித்தும் வெளியிட்டுள்ளது. இவ்வாறாக திருமதி.ஆர்.மீனா ராஜசேகரன், முன்னாள் சார்பதிவாளர் என்பவரின் மேல்முறையிட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆ. தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கப்படாமை:-

- ஏதுமில்லை -

இ. அரசின் கொள்கை தொடர்புடைய விவகாரங்கள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர, தேர்வாணையத்தின் ஆலோசனைகளை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை குறிப்பிடுவதோடு எதிர்காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்ததும், தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசு முடிவெடுத்ததுமான இனங்கள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை-XII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏற்புரை

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இடவசதி அளித்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளைத் திறம்பட நடத்திமுடிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுப் பணிகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் அழைத்தபோதெல்லாம் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பொருட்படுத்தாமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்களுக்கும், ஆலோசனை வழங்கிய வல்லுநர்களுக்கும் இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாறுதல் மூலம் நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரிய பணியாளர்களை இறுதித் தெரிவு செய்து பரிந்துரை செய்ய அமைக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் தேர்வாணையம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

இறுதியாக, தேர்வாணையத்தின் பணிகள் முறையாக நடைபெற ஆண்டு முழுவதும் உண்மையாகவும், திறமையாகவும் பணிபுரிந்த தேர்வாணையத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

முனைவர்.க.அருள்மொழி, இ.ஆ.ப., (ஓய்வு)	தலைவர்
முனைவர்.மூ.ராசாராம், இ.ஆ.ப., (ஓய்வு)	உறுப்பினர்
முனைவர்.பெ.கிருஷ்ணகுமார், பி.இ., எம்.பி.ஏ., எம்.பில்., எம்சிஎஸ்டி (யுஎஸ்ஏ)., பிடிஎப்எல் (மலேசியா)., எம்ஐஇஇஇ., பி.எச்.டி.,	உறுப்பினர்
திரு.அ.சுப்ரமணியன், பி.இ., எம்.ஐ.இ.,	உறுப்பினர்
திரு.வெ.சுப்பையா, எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு.ஏ.வி.பாலுசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,	உறுப்பினர்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
சென்னை - 600 003.
நாள்: 14.08.2018

க. நந்தகுமார், இ.ஆ.ப
செயலாளர்

பிற்சேர்க்கை– I

31.03.2018 - அன்று உள்ளபடி தேர்வாணையத்தின் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் பணியிட எண்ணிக்கை பட்டியல்

வ.எண்.	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1.	இணைச் செயலாளர்	1
2.	துணைச் செயலாளர்	3
3.	சார்புச் செயலாளர்	20
4.	கணக்கு அலுவலர்	1
5.	உதவி கணக்கு அலுவலர்	1
6.	ஆராய்ச்சி அலுவலர்	1
7.	நூலகர்	1
8.	முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர்	1
9.	பிரிவு அலுவலர்	72
10.	தனிச் செயலாளர்	1
11.	உதவிப் பிரிவு அலுவலர்	168
12.	உதவிப் பிரிவு அலுவலர்–உடனான– நிரலாளர்	26
13.	உள்ளீடு-வெளியீடு மேற்பார்வையாளர் (கணிப்பொறி)	1
14.	உள்ளீடு-வெளியீடு இயக்குபவர் (கணிப்பொறி)	1
15.	அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி)	8
16.	நேர்முக உதவியாளர்	7
17.	நேர்முக எழுத்தர்	12
18.	உதவியாளர்	99
19.	தட்டச்சர்	39
20.	தொலைபேசி இயக்குபவர்	2
21.	பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர்	23
22.	மின் தூக்கி இயக்குபவர்	1
23.	முதன்மை ஏவலர்	1
24.	ஊர்தி ஓட்டுநர்	17
25.	அலுவலக உதவியாளர்	92
26.	காவலர்	6
27.	பெருக்குபவர்	4
28.	துப்புரவுப் பணியாளர்	3
29.	குடிநீர் வைப்பவர்	1
30.	துப்புரவுப் பணியாளர் (கால ஊதியம்)	11
	மொத்தம்	624

பிற்சேர்க்கை – II

[பகுதி - (I) (III) (6)]

2017-2018 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

இனங்கள்	*தொகை ஆயிரங்களில் (ரூபாய்)*
வருவாய்	
தேர்வுக் கட்டணம்	1,53,633
விண்ணப்பக் கட்டணம்	1,85,332
பழைய பொருட்கள் விற்பனை	462
இதர வருவாய்	1,824
சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்)	16
மொத்தம்	3,41,267
செலவு	
அடிப்படை சம்பளம்	1,53,389
மருத்துவப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி	24,869
அகவிலைப்படி	1,10,906
மருத்துவச் செலவுகள்	553
ஏனைய படிகள்	1,280
விடுப்புப் பயணச் சலுகைகள்	104
சம்பளம்	2,765
பயணப் படிகள்	1,046
தொலைபேசிக் கட்டணங்கள்	918
இதர சில்லரைச் செலவினம்	1,480
மின்சாரக் கட்டணம்	4,301
அஞ்சல் செலவுகள்	400
சொத்து வரி	782
தண்ணீர் கட்டணம்	517
விளம்பரச் செலவுகள்	32,445
உபசரிப்பு செலவினம்	60
கால முறை பராமரிப்பு	480
இயந்திரம் மற்றும் உபகரணம் வாங்கியது	999
இயந்திர பராமரிப்பு	300
இயக்க ஊர்தி பராமரிப்பு	199
வாடகை கட்டணங்கள்	850
தொழில்சார் மற்றும் சிறப்புப் பணிகளுக்கான உழைப்பு ஊதியம்	2,99,999
ஏனைய சில்லரைச் செலவுகள், நூலக புத்தகம் வாங்குதல் மற்றும் அறைகலன்	499
எரிபொருள், எண்ணெய், உராய்வு எண்ணெய்	982
பரிசுகள் மற்றும் விருதுகள்	10
கணிப்பொறி மற்றும் துணைப்பொருள்கள் – வாங்குதல் மற்றும் பராமரித்தல்	1,273
எழுதுபொருள்கள்	780
மொத்தம்	6,42,186

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017-2018

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள்	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
				ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
1.	தொகுதி–IV–ல் உள்ளடக்கிய இளநிலை உதவியாளர் (2013–2014) மற்றும் (2014 – 2015)	14.10.2014	22..05.2015	–	–	–	1	–	–	1	2	–	–
2.	தொகுதி–IV–ல் உள்ளடக்கிய தட்டச்சர் (2013–2014) மற்றும் (2014 – 2015) IV phase	14.10.2014	22.05.2015	–	–	–	–	–	2	–	2	–	–
3.	கிராம நிர்வாக அலுவலர் 2014–2015 (தமிழ்நாடு அமைச்சுப் பணி)	12.11.2015	01.07.2016 கலந்தாய்வு 01.04.2017 முதல் 31.03.2018 வரை	–	–	–	–	–	–	–	147	10,43,931	–
4.	நேர்முக எழுத்தர் – ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு – II (தொகுதி II A பணிகள்) (வாய் மொழி தேர்வு இல்லாதவை) (2014 –2016)	12.10.2015 மற்றும் 20.10.2015	02.11.2016	–	–	6	1	1	1	2	11	-	–
5.	உயர் நீதி மன்றப் பணிகள் 2016, ரீடர், எக்சாமினர் – உடனான– ஜெராக்ஸ் ஆப்ரேட்டர்.	20.02.2016	02.11.2016	–	2	–	–	–	2	–	4	60,800	–
6.	தொகுதி–IV–ல் உள்ளடக்கிய தட்டச்சர் (2015–2016) (தமிழ்நாடு அமைச்சுப் பணி)	09.08.2016	21.02.2017	269	51	16	355	458	72	544	1765	15,91,977	-

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்								கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ (ஆ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்	ப.வ	ப.வ (ஆ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(15)	(16)	(17)	(18)	(19)	20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
–	–	–	–	–	–	–	-	-	-	-	1	-	-	1	2	பத்தாம் வகுப்பு	-
-	-	-	-	-	-	-	-	-	-	-		–	2	-	2	பத்தாம் வகுப்பு	-
-	-	-	-	-	-	-	-	43	20	4	33	34	13	–	147	பத்தாம் வகுப்பு	-
-	-	-	-	-	-	–	-	–	–	–	1	3	1	–	5	இளங்கலை பட்டப்படிப்பு	6 ப.கு நிரப்பப்படவில்லை. 2 பி. வ –பொது பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்
–	–	-	-	-	-	-	-	-	2	-	-	-	2	-	4	இளங்கலை பட்டப்படிப்பு	-
								267	50	16	351	457	70	539	1750	பத்தாம் வகுப்பு	1 பி.வ, (பார்வையற்றவர்) 1பி.வ.(மு), (பார்வையற்றவர்) 2 மி.பி.வ/சீ.ம. (பார்வையற்றோர்) , 2 ப.வ (பார்வையற்றோர்)., 1ப,வ (அ) (பார்வையற்றவர்), , 5 பொது (பார்வையற்றோர்), 2 நிரப்பப்படவில்லை, 1 – நீதிமன்ற வழக்கினால் நிலுவையில் உள்ளது.

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள்	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
				ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
7	தொகுதி IV –ல் இளநிலை உதவியாளர்,நில அளவர், வரைவாளர் (2015–2016)	09.08.2016	21.02.2017	442	93	31	583	789	115	919	2972	1591977	-
8.	வட்டார புள்ளியியல் ஆய்வாளர் தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணி (2007 – 2011)	12.02.2016	14.06.2017	25	5	2	34	47	6	53	172+1 cf 173	13014	11170
9.	ஒருங்கிணைந்த குடிமைபப்பணி –I தேர்வு (தொகுதி – I) (2013 – 2015)	10.07..2015	11.09.2017 (I Phase) 27.10.2017 (II Phase)	14	-	-	14	18	5	23	74	223112	-
10.	மீன்வளத்துறை சார்பு ஆய்வாளர், தமிழ்நாடு மீன்வளத் துறை (2013–2014)	09.09.2016	27.09.2017	3	-	-	2	3	-	4	12	4999	-
11.	முதலாள் (கடல்கள்) தமிழ்நாடு மீன்வளத் துறை சார்நிலைப்பணிகள் (2014–2015)	09.09.2016	27.09.2017	-	-	-	-	2	-	2	4	4722	4375
12.	ஒருங்கிணைந்த குடிமைபப்பணி – I I தேர்வு (தொகுதி – I I A பணிகள்) (வாய் மொழி தேர்வு அல்லாதவை) (2014 –2016)	12.10.2015 மற்றும் 20.10.2015	27.09.2017	323	63	23	426	570	78	661	2144	869622	-

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்								கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்	ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
–	–	–	–	–	–	–	–	448	113	31	989	1257	115	13	2966	பத்தாம் வகுப்பு	6 பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். 6 ப.வ., 20 ப.வ(அ), 406 மி.பி.வ/சீ.ம, 468 பி.வ – பொது பிரிவில் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.
–	–	–	–	–	–	–		26	5	2	51	77	7	3	171	பட்டப்படிப்பு	(2 c/f (1 ப.வ ஊனமுற்றவர்),1 மி.பி,வ/சீ.ம (ஊனமுற்றவர்), பணியிடம் நிரப்பப்படவில்லை
–	–	–	–	–	–	–	–	15	–	–	22	32	5	–	74	பட்டயப்படிப்பு	1 ப.வ., 8 மி.பி.வ./ சீ.ம, 14 பி.வ, பொது பிரிவில் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.
–	–	–	–	–	–	–	–	3	–	–	3	6	–	–	12	மீன் வள அறிவியலில் இளங்கலை பட்டப்படிப்பு	1 மி.ப.வ./சீ.ம, 3 பி.வ, – பொது பிரிவில் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.
–	–	–	–	–	–	–	–	–	–	–	1	3	–	–	4	இயந்திர பொறியியலில் பட்டய / பட்டப்படிப்பு	1 பி.வ, 1 மி.பி.வ/ சீ.ம, – பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்
								335	66	25	663	961	80	14	2144	பட்டப்படிப்பு	391 பி.வ, 237 மி.பி.வ/சீ.ம, 2 பி.வ(மு), 12 ப.வ,3 ப.வ.(அ), 2 ப.கு பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள்	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
				ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
13	இளநிலை அறிவியல் அலுவலர், தமிழ்நாடு தடவியல் சார்நிலைப் பணிகள் (2013–2015)	29.07.2016	26.11.2017	4	1	1	5	9+ 1* *c/f	–	9	29+1 (30)	8788	–
14.	பரிசோதகர், தமிழ்நாடு தொழிற்சார் நிலைப் பணிகள் (2014–2016)	19.02.2016	26.10.2017	1	–	–	1	1	–	1	4	793	762
15	உதவி பரிசோதகர், தமிழ்நாடு தொழிற்சார் நிலைப் பணிகள்(2013–2014)	19.02.2016	26.10..2017	–	–	–	1	1	–	–	2	793	762
16	உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிகள் உள்ளடக்கிய பணிகள் (2007–2008) (2010–2011) (2012–2013) (2015–2016) & (2016–2017)	15.12.2016	09.11.2017	2	1	–	3	4	–	4	14	5798	5653
17	சிறை துறை அலுவலர், தமிழ்நாடு சிறைத் துறைப் பணிகள் (2013–2015)	28.12.2016	09.11.2017	1	–	–	1	2	1	1	6	6811	6796
18.	சமூக ஆய்வு பணி நிபுணர், தமிழ்நாடு சிறைத்துறை பணிகள்,(2009–2010) (2010–2011), (2013–2014)	04.01.2017	22.11.2017	–	1	–	1	–	–	1	3	2087	881
19.	உதவிப் பணி மேலாளர், தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகப் பணிகள் (2015–2016)	01.03.2017	28.11.2017	–	–	–	–	1	–	2	3	228	159
20	தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் கண்காணிப்பு பணிகளில் கண்காணிப்பாளர்,ஆடைகள் மற்றும் துணிப்பை உற்பத்தி பிரிவு, வேலூர்.	02.12.2016	04.12.2017	–	–	–	–	–	–	1	1	220	198

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்								கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்	ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
–	–	–	–	–	–	–	–	4	2	1	5	15	1	2	30	தடயவியலில் முதுகலை பட்டப்படிப்பு	(1 ப.வ.(அ) , 5 பி.வ, 1 பி.வ.(மு), 2 மகளிர்) – பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்
–	–	–	–	–	–	–	–	1	–	–	1	2	–	–	4	எலட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் பொறியியலில் பட்டய /பட்டப் படிப்பு	1 பி.வ – பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளார்
–	–	–	–	–	–	–	–	–	–	–	1	1	–	–	2	எலட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் பொறியியலில் பட்டய /பட்டப் படிப்பு	–
								2	1	–	3	8	–	–	14	டெக்ஸ்டெய்ல் டெக்னாலா ஜியில் இளங்கலை பட்டப்படிப்பு	4 பி.வ. பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்
–	–	–	–	–	–	–	–	1	–	–	1	3	1	–	6	முதுகலை பட்டப்படிப்பு	1 பி.வ. பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளார்
–	–	–	–	–	–	–	–	–	1	–	1	1	–	–	3	முதுகலை பட்டப்படிப்பு	1 பி.வ. பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளார்
–	–	–	–	–	–	–	–	–	–	–	1	2	–	–	3	பிரின்ட்டிங் டெக்னாலாஜில் பொறியியல் பட்டப்படிப்பு	1 பி.வ, 1 மி.பி.வ,/ சீ.ம பொது பிரிவின் கீழ் தெரிவு சய்யப்படடுள்ளனர்.
–	–	–	–	–	–	–	–	–	–	–	–	1	–	–	1	பத்தாம் வகுப்பு மற்றும் டெய்லரிங்	1 பி.வ பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் படடுள்ளார்

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள்	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
				ப.வ	ப.வ (இ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
21.	உதவி சிறைத் துறை அலுவலர், தமிழ்நாடு சிறைத் துறை சார் நிலைப் பணிகள் (1996 – 2010)	09.03.2016	05.12.2017	15	4	1	21	27	4	32	104	31821	20791
22.	இளநிலை கூட்டுறவு ச் சங்கங்கள் ஆய்வாளர், தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணிகள், (தொகுதி III A)	17.05.2013	21.12.2017	4	1	1	7	8	1	2	24	64605	64595
23.	சுருக்கெழுத்து தட்டச்சர், நிலை III, நீதித்துறை அமைச்சுப்பணி	09.08.2016	22.12.2017	78	14	9	95	119	43	127	485	1591777	–
24.	உதவி இயக்குநர், தொழில்துறை மற்றும் வணிகம், (தொழிற் சார் கூட்டுறவு பணிகள்)	15.03.2017	10.01.2018	1	–	–	1	1	–	1	4	2478	2382
25.	செயல் அலுவலர், நிலை IV, தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித்துறை பணிகள் (2014–2015) (2015–2016), (2016–2017)	15.12.2016	19.01.2018	8	1	1	10	14	–	15	49	76378	76141
26	விடுதி கண்காணிப்பாளர் உடனான உடற்பயிற்சி அதிகாரி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார் நிலைப்பணிகள்(2013–2014) (2014–2015) (2015–2016)	08.02.2017	19.01.2018	4	1	–	5	6	2	9	27	3458	2949

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்								கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்	ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
–	–	–	–	–	–	–	–	16	4	1	29	50	4	–	104	இளங்கலை பட்டப் படிப்பு	23 பி.வ, 8 மி.பி.வ/சீ.ம, 1 ப.வ – பொது பிரிவின் கீழ் தெரிவு சய்யப் படடுள்ளனர்
–	–	–	–	–	–	–	–	6	–	1	7	9	1	–	24	இளங்கலை பட்டப் படிப்பு	1 பி.வ, 1 ப.வ – பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ளனனர். 1 ப.வ (அ) ப.வ பிரிவின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.
–	–	–	–	–	–	–	–	76	14	–	92	116	5	125	428	பத்தாம் வகுப்பு	1 பி.வ., 9 ப.கு, 2பவ,3 மி.பி.வ/சீ.ம, 38 பி.வ.(மு), 3 பி.வ., 1 பொது – மகளிர், 1 பொது மகளிர் (காது கேளாதவர்) நிரப்பப்படவில்லை,
–	–	–	–	–	–	–	–	1	–	–	1	2	–	–	4	முதுகலை பட்டப் படிப்பு	–
–	–	–	–	–	–	–	–	8	1	1	10	14	–	15	49	பத்தாம் வகுப்பு	5 மி.பி.வ/சீ.ம., 9 பி.வ, 1 மகளிர், பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளனர்.
–	–	–	–	–	–	–	–	6	2	–	6	10	2	–	26	உடற் பயிற்சிக் கல்வியில் பட்டய படிப்பு	நீ தி ம ன் ற ஆணைகிணங்க ஒரு நபர் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டார். 2 ப.வ. 1 ப.வ.(அ), 1 மி.பி.வ/சீ.ம, 4 பி.வ பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் படடுள்ளனர்

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள்	காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
				ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
27.	உதவிப் பேராசிரியர், ரேடியாலஜி, தமிழ்நாடு மருத்துவப் பணிகள் (2016 – 2017)	17.05.2017	08.02.2018	2	–	–	3	4	1	3	13	124	121
28.	மண்ணியலாளர், நெடுஞ்சாலைத்துறை, மண்ணியல் மற்றும் சுரங்கத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை சார்நிலைப்பணிகள் (2013–2014) (2014–2015) மற்றும் (2015–2016)	22.02.2017	08.02.2018	8	2	–	12	14	3	14	53	1391	1339
29.	செயல் அலுவலர் நிலை III, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைப் பணிகள்	25.11.2016	22.02.2016	4	1	–	6	9	–	9	29	55154	55154
30.	இயக்குநர், உடற்பயிற்சி கல்வி, தமிழ்நாடு கல்லூரி கல்விப் பணி (2007–2009)	29.07.2009	07.03.2018	7	2	–	9	10	2	13	43	–	–
	மொத்தம்										8204		

பிற்சேர்க்கை – III

நேரடித் தேர்வு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி 2)

ஆண்டு 2017–2018

வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்								கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்	ப.வ	ப.வ (அ)	ப.கு	மி.பி.வ/சீ.ம	பி.வ	பி.வ (மு)	பொது	மொத்தம்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
–	–	–	–	–	–	–	–	2	–	–	3	7	1	–	13	முதுகலை பட்டப்படிப்பு	3 பி.வ, பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளனர்
–	–	–	–	–	–	–	–	8	2	–	13	18	3	9	53	பி.எஸ்.சி., எம்.எஸ்.சி., மண்ணியல்	1 மி.பி.வ, /சீ.ம, 4 பி.வ– பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளனர்.
–	–	–	–	–	–	–	–	3	2	–	10	13	–	1	29	இளங்கலை பட்டப்படிப்பு	4மி.பி.வ, /சீ.ம, 4 பி.வ – பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப் படடுள்ளனனர். 1 ப.வ(அ) . ப.வ பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளார்.
–	–	–	–	–	–	–	–	7	2	–	12	20	2	–	43	உடற்பயிற்சி கல்வியில் முதுகலை பட்டப்படிப்பு	3 மி.பி.வ, /சீ.ம, 10 பி.வ– பொது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்படடுள்ளனர்.
															8117		

பிற்சேர்க்கை – IV

பகுதி – 1 (III) (7)]

2017-2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	பதவிகளின் வகைகள்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
1.	ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி II A (நேர்காணல் அல்லாத பதவிகள்)	27.04.2017	41	1953	7,57,352
2.	சுற்றுலா துறைஅதிகாரி	09.05.2017	1	5	373
3.	உதவி பேராசிரியர், கதிரியக்க இயற்பியல்	17.05.2017	1	13	124
4.	தானியங்கி பொறியாளர், MVN துறை, மற்றும் காவல் போக்குவரத்து பணிமனை	26.05.2017	2	3	364
5.	உதவி ஆணையர், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை	01.06.2017	1	3	411
6.	உதவி பொறியாளர், வேளாண்மை பொறியியல்	05.07.2017	1	21	6703
7.	உதவியாளர், தலைமைச் செயலகப் பணி தொகுதி V A. பணிகள்	31.08.2017	1	54	131
8.	புள்ளியியலாளர், மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி	05.09.2017	2	31	7627
9.	உதவி வனப் பாதுகாவலர்	12.09.2017	1	14	10,459
10.	ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி IV	14.11.2017	8	9,351	20,83,152
11.	செயல் அலுவலர், நிலை I, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை	14.11.2017	1	4	822
12.	ஒருங்கிணைந்த பொறியியல் சார்நிலைப் பணிகள்	17.11.2017	4	147	55,403
13.	இளநிலை பகுப்பாய்நர்	24.11.2017	4	24	2,701
14.	உதவி ஆணையர், தொழிலாளர் துறை (இதற்குமுன் தொழிலாளர் நல அலுவலர்)	12.01.2018	1	10	6,034
15.	ஆய்வக உதவியாளர், தடயவியல் துறை	25.01.2018	1	56	1,35,901

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	பதவிகளின் வகைகள்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை
16.	இயக்க ஊர்தி ஆய்வாளர், நிலை II, தமிழ்நாடு போக்குவரத்து சாநிலைப் பணி	14.02.2018	1	113	2,629
17.	ஒருங்கிணைந்த பொறியியல் சார்நிலைப் பணிகள்	28.02.2018	5	330	69,789
மொத்தம்			76	12,132	31,39,975

பிற்சேர்க்கை–V

[பகுதி – II]

2017–2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளின் விவரங்கள்

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை		தேர்வு நாள்
	I – முதல்நிலைத் தேர்வு					
1.	உதவி ஆணையர், தமிழ் நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை	3	411	183		03.07.17 மு.ப
2,	உதவி வனப் பாதுகாவலர்	14	19418	10459		17.12.17 மு.ப
	மொத்தம்	17	19829	10642		
	II – முதன்மைத் தேர்வு					
1.	உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் ஜவுளித் துறை (2007–2008) (2010–2011) (2012–2013) (2015–2016)	14	5994	மு.ப 3213	பி.ப 3197	08.04.2017 மு.ப & பி.ப
2.	சிறை அலுவலர், (2013–2014), (2014–2015)	6	7123	மு.ப 3607	பி.ப 3573	15.04.2017 மு.ப & பி.ப
3.	விடுதி கண்காணிப்பாளர் உடனான உடற்பயிற்சி அதிகாரி, தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சார் நிலைப் பணிகள்.	27	3577	மு.ப 1777	பி.ப 1185	20.05.2017 மு.ப & பி.ப
4.	சமூக ஆய்வுப் பணி நிபுணர்	3	2329	மு.ப 271	பி.ப 271	21.05.2017 மு.ப & பி.ப
5.	செயல் அலுவலர், நிலை III, (தொகுதி VII B) (2014 –2017)	29	56962	மு.ப 27120	பி.ப 25702	11.06.2017 மு.ப & பி.ப
6.	செயல் அலுவலர், நிலை IV, (தொகுதி VIII) (2014–2017)	49	78541	மு.ப 39801	பி.ப 29452	10.06.2017 மு.ப & பி.ப
7.	உதவி மண்ணியலாளர், மண்ணியியல் பல்வேறு துறைகள்	53	1400	மு.ப. 792 மு.ப. 783	பி.ப. 914	24.06.2017 மு.ப & பி.ப. & 25.06.2017 மு.ப மட்டும்
8.	உதவிப் பணி மேலாளர், தமிழ்நாடு அரசு அச்சகம், எழுது பொருள் மற்றும் அச்சகத் துறை	3	332	மு.ப 158	பி.ப 159	25.06.2017 மு.ப & பி.ப
9.	உதவி வேளாண்மை அலுவலர், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க சார் நிலைப் பணிகள்	333	4377	மு.ப 3577	பி.ப 3574	02.07.2017 மு.ப & பி.ப

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை		தேர்வு நாள்
10.	உதவி இயக்குநர், தொழில் மற்றும் வணிகம், (தொழில் கூட்டுறவு) தமிழ்நாடு தொழிற்சார் பணிகள்	4	2632	மு.ப 1034	பி.ப 1031	16.07.2017 மு.ப & பி.ப
11.	ஒருங்கிணைந்த குடிமை சார் பணிகள் – II (தொகுதி II நேர்காணல் அல்லாத பதவிகள்)	1953	757352	556072		06.08.2017 மு..ப
12.	தானியங்கி பொறியாளர் MVN துறை மற்றும் காவல் போக்குவரத்து பணிமனை	3	364	மு.ப 109	பி.ப 108	20.08.2017 மு.ப & பி.ப
13.	உதவிப் பேராசிரியர், கதிரியக்க இயற்பியல்.	13	124	மு.ப 99	பி.ப 99	03.09.2017 மு.ப & பி.ப
14.	சுற்றுலா துறை அதிகாரி	5	373	மு.ப 209 பி.ப 197	பி.ப 203	09.09.2017 மு.ப . & பி.ப 10.09.2017 மு.ப
15.	உதவிப் பொறியாளர், (வேளாண்மைப் பொறியியல்)	21	6703	மு.ப 3256	பி.ப 3208	07.10.2017 மு.ப & பி.ப
16	ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் – I (தொகுதி I பணிகள்.)	85	4199	மு.ப 3139 மு.ப 3076 மு.ப 3039		13.10.17 மு.ப 14.10.17 மு.ப 15.10.17 மு.ப
17.	உதவியாளர், தலைமைச் செயலகப் பணி (தொகுதி V A)	54	131	57		25.11.2017 மு.ப.
18.	புள்ளியிலாளர், மருத்துவம், இந்தியன் மருத்துவம், ஹோமியோபதி துறை.	31	7627	மு.ப. 4536	பி.ப 4501	26.11.2017 மு.ப . & பி.ப
19.	செயல் அலுவலர், நிலை I, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை	4	822	மு.ப. 270 மு.ப. 261	பி.ப 264	20.01.2018 மு.ப . & பி.ப 21.01.2018 மு.ப.
20.	ஒருங்கிணைந்த சார் நிலைப் பணிகள் (தொகுதி IV)	9351	20,83,152	17,52,804		11.02.2018 மு.ப.
21.	இளநிலை பகுப்பாய்நர்	24	2701	மு.ப. 594 மு.ப. 709	பி.ப 1228	17.02.2018 மு.ப . & பி.ப 18.02.2018 மு.ப.
22.	ஒருங்கிணைந்த பொறியியல் சார் நிலைப் பணிகள்	147	55403	மு.ப. 29481	பி.ப 29168	24.02.2018 மு.ப . & பி.ப
23.	உதவி ஆணையர், தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை	3	411	56		10.03.2018 மு.ப . & பி.ப 11.03.2018 மு.ப.
	மொத்தம்	12,215	30,82,629	25,47,934		–